**பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை - 2019**

---

**1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகார சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகார சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.3 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபையின் நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்சான்றுகள் எனது முடிவுகளிற்கு

அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகார சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகார சபையின் ஆளுகை அதிகார சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகார சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- அதிகார சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.4.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

----------------------------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 61,157,169 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 101,561,289 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 40,404,120 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. எனினும் மீளாய்வாண்டில் திறைசேரியினால் மீண்டெழும் வருமானம் ரூபா 12,992,592 ஆக அதிகாரித்திருந்த போதிலும் சம்பளம், ஒப்பந்த சேவை, மற்றும் ஏனைய செலவினங்களின் பெறுமதி முறையே ரூபா 9,044,998 ஆகவும், ரூபா 14,367,183 ஆகவும் மற்றும் ரூபா 12,500,148 ஆக அதிகரித்ததுடன் ஆதனம், பொறி, இயந்திர உபகரணங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம் ரூபா 21,899,972 இனால் குறைவடைந்ததுள்ளது. இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் திருத்தங்கள் 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டிலிருந்து 16 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் இற்றைவரை சட்டத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை . எனவே, அதிகாரசபையின் செயல்பாடுகளை நிகழ்காலத்திற்கு ஏற்ற வகையில் மேற்கொள்ள முடியவில்லை. | இறுதி வரைவு 2019.08.16 ஆம் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அதன்பிறகு சட்ட வரைஞர் திணைக்களத்தினால் 27.12.2019 ஆம் திகதி வரிசை அமைச்சிற்கு வரைவு அனுப்பட்டிருந்தது. 03.02.2020 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை செயலணி வரைவு அறிக்கையினை அரசாங்கம் மற்றும் செயலாளர்களின் மாற்றத்திற்கமைய புதிய அமைச்சரவை செயலணியின் அனுமதியுடன் அமைச்சகத்திற் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. 18.02.2020 ஆம் திகதியில் பொறுப்பான அமைச்சர் மற்றும் இவ் விடயத்திற்கு முன்பு பொறுப்பான அமைச்சர் மீண்டும் ஒரு குழுவை நியமித்து புதிய திருத்தங்களை பரிசீலிக்க அறிவுறுத்தினார். அதன்படி, 28.07.2020 திகதியிட்ட கடிதத்தில், வரிசை அமைச்சின் செயலாளர் ஒரு குழுவை நியமிக்கும் கடிதத்தை அனுப்பியுள்ளார். | சட்டத்தின் திருத்தங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டில் முகாமைத்துவ திட்டமிடலின் இலக்குக்கு வைக்கப்பட்ட திடீர் பரிசோதனைகளின் எண்ணிக்கை 29,000 ஆக காணப்பட்டதுடன் அது மாதந்தோறும ஒவ்வொரு மாவட்டத்திற்குரிய பரிசோதனை செய்யப்பட்ட இலக்கு 26,405 வரை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிலே இலக்கு வைக்கப்பட்ட தீடீர் பரிசோதனைகளின் எண்ணிக்கை 27,216 ஆக காணப்பட்டதுடன் 2018 இல் 357 ஆகவும் 2019 இல் 454 ஆகவும் குறைவடைந்து காணப்படுகின்றது. முன்னைய வருடத்தில் அதிகார சபையின் விசாரணை அதிகாரிகள் 213 பேர் புதிதாக நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 உடன் ஒப்பிடுகையில் குறைந்த தீடீர் பரிசோதனை இலக்குகளே தீர்மானிக்கப்பட்டிருந்தன. | விசாரணை அதிகாரிகளுக்கான பணியின் நோக்கம் மிகவும் விரிவானது மற்றும் தீடீர் பரிசோதனை கடமை ஒரு விடய பகுதி மட்டுமேயாகும். நுகர்வோர் மற்றும் சந்தை விழிப்புணர்வு, நுகர்வோர் முறைப்பாடுகளை தீர்த்தல், சந்தைக் கணக்கெடுப்புகளை நடத்துதல், சோதனைகள் தொடர்பான நீதிமன்ற கடமைகளை நடத்துதல் போன்ற முக்கிய செயல்பாடுகளுக்கு மேலதிகமாக, சில மாவட்டங்களில் உள்ள விசாரணை அதிகாரிகளும் அந்தக் கடமைகள் தொடர்பான ஆவணங்களைத் தயாரித்து தரவுத்தளத்தைப் புதுப்பித்துள்ளனர். அலுவலக தேவைகளின் அடிப்படையில் அதிகாரிகள் இந்த கடமைகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள் மற்றும் தீடீர் பரிசோதனை கடமைகளுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தீடீர் பரிசோதனை இலக்குகள் திருத்தப்படுகின்றன. எனினும், திருத்தப்பட்ட தீடீர் பரிசோதனை இலக்குகளின்படி, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான குறைந்த தீடீர் பரிசோதனை இலக்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | விசாரணை அதிகாரிகளுடன் தொடர்புடைய சோதனை இலக்குகள்நிர்ண யிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த அளவிற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்பதற்கான திட்டத்தை அதிகார சபை தயாரிக்கவில்லை, ஆனால் மீளாய்வாண்டில் 1,538 விழிப்புணர்வு திட்டங்களை நடத்தப்பட்டிருந்தன. இவற்றில், அதிக மக்கள் தொகை மற்றும் கடைகளைக் கொண்ட A மற்றும் B வகை மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது, குறைந்த மக்கள் தொகை மற்றும் கடைகளைக் கொண்ட C மற்றும் D வகை மாவட்டங்களில் அதிக விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டிற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த இலக்குகளை 2019 ஆம் ஆண்டிற்கான இலக்குகளாக கருத்தில் கொள்ளுமாறு மாவட்ட அதிகாரிகள் தொடர்பாக நடாத்தப்பட்ட முன்னேற்ற அறிக்கைக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அந்த இலக்குகளின்படி, ஒரு மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட வேண்டிய விழிப்புணர்வு திட்டங்கள 23 ஆகும். மக்கள் தொகை செறிந்து காணப்படும் அடிப்படையிலும் மற்றும் அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கக்கூடிய வகையில் திட்டங்களை நடாத்துவது தொடர்பாக அதிகாரிகளினால் அவதானம் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2018/01 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையில் பிரிவு 3 இல் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மேலும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததை தெரிவித்துகொள்கின்றேன். | ஆண்டுதோறும் எந்த அளவிற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்பதற்கும் அதற்கேற்ப ஒரு திட்டம் தயாரிக்கப்பட செயல்படுவதற்கும் வேண்டும். |
| (இ) 2015 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அதிகாரசபையின் சட்டப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் 1476 இல் 112 முறைப்பாடுகள் இணங்காமையினால் சட்ட நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்பட்டன. எனினும் ஒரு முறைப்பாடு இணக்கப்படாமை தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைக்கு எடுக்கப்படவிருந்ததுடன், சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாததினால் 65 முறைப்பாடுகள் நிலுவையில் உள்ளன. அதன்படி, 492 முறைப்பாடுகள் இன்னும் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவற்றில் 136 | அதிகார சபையினால் பெறப்பட்ட முறைப்பாடுகள், நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் குழு அடங்கிய விசாரணை சபையினால் விசாரிக்கப்படுகின்றது என்பதுடன் அதிகார சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையில் காலத்திற்குகாலம் பல முறை ஏற்படும் மாற்றங்கள்/புதிய நியமனங்கள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபையை நியமிப்பதற்கு காலதாமதமேற்படுவதானால் | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை விசாரணைகள் 356 விசாரணை செயலாக்கத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | முறைப்பாடுகள் மட்டுமே 2019 ஆம் ஆண்டிற்கு உரியவையாகும். 2015 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் பெறப்பட்ட 356 முறைப்பாடுகளில், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. | முறையான விசாரணை நடவடிக்கைகள் காலத்திற்கு காலம் இரத்து செய்வது, ஒத்திவைக்கப்படுவது அல்லது எதிர்வரும் குறிப்பிட்ட திகதியில் மட்டும் பரிசீலனை செய்யப்படுகின்றது. காலதாமதத்துடன் வாடிக்கையாளர்களிமிருந்து பெறப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக 14.02.2019 ஆம் திகதியிட்ட உள்ளக கடிதத்தின் மூலமாக பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரை அதிகாரசபையின் சட்டப் பிரிவில் தாக்கல் செய்யப்பட்ட 202 முறைப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இரு தரப்பினரும் இணக்கத்திற்கு வராமையினால் குறித்த பிரதிவாதிக்கு உத்தரவு பிறப்பிக்க விசாரணை சபை முடிவு செய்திருந்தது. அதன்படி, 202 முறைப்பாடுகளில் 127 இற்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதுடன் அந்த உத்தரவுகள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டன. இருப்பினும், 20 முறைப்பாடுகள் தொடர்பாக வழங்கப்பட்ட உத்தரவுகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியின்படி 55 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை சபையினால் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 முதல் 2019 திசெம்பர் 31 வரை 185 முறைப்பாடுகள் வழங்க முடிவு செய்யப்பட்டன, அவற்றில் 140 முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் 30 ஆவணங்கள் தொடர்பான முறையான விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் இற்றைவரை 14 முறைப்பாடுகள் மட்டுமே இரு கட்சிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை . | விசாரணை உத்தரவுகளை தாமதமின்றி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2003 ஆம் ஆண்டின் 09 இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் பிரிவு 13 (4) இன் பிரகாரம் அதிகாரசபைக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு சூழ்நிலைக்கேற்ற வகையில் அதிருப்தி அடைந்த தரப்பினருக்கு இழப்பீடு வழங்குவதற்காக பணத்தினையோ அல்லது பொருட்களினையோ நட்டஈடாக வழங்குவதற்கு அல்லது உற்பத்தியாளர் அல்லது வியாபாரிக்கு பணத்தினை செலுத்துமாறு எழுத்து மூலம் அதிகாரசபையால் தெரிவிக்கப்பட வேண்டும். இருப்பினும், ஆய்வு | வேலையிலிருந்து விலகிச்சென்றத இரண்டு முழுநேர உறுப்பினர்களின் கையொப்பங்களுக்காக 12 முறைப்பாடுகள் தொடர்பான உத்தரவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன. ஆனால் இதுவரை அவர்களின் கையெழுத்து பெறப்பட்டிருக்கவில்லை, இது தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்துகின்றனர். மேலும் 02 உத்தரவுகளை 2020 ஆம் ஆண்டிற்கான | விசாரணை சபையினால் உடனடியாக தொடர்புடைய உத்தரவுகளில் கையெழுத்திட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறியப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட 08 விசாரணை முறைப்பாடுகள் தொடர்பாக, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டில், பிரதிவாதிகளுக்கு மொத்தம் ரூபா. 717,993 இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. கணக்காய்வு செய்யப்பட்ட திகதிக்குள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்தரவுகள் சமர்ப்பிக்கப்படவில்லை மற்றும் விசாரணை சபை உறுப்பினர்களின் கையொப்பங்கள் இல்லாததால், 06 முறைப்பாடுகளுக்கு கொடுக்கப்பட்ட உத்தரவுகள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையினால் அனுமதியளித்துள்ளது. அதன்படி, இந்த உத்தரவுகள் எதிர்கால திகதியில் தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கப்படும். மற்றொரு உத்தரவு 2020 யூலை மாதம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) அதிகாரசபையினால் பெறப்பட்ட முறைப்பாடுகள் விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்ட பின்னர், இரண்டு தடவைகளுக்கான விசாரணைகளுக்கு 06 மாதங்களுக்கு மேற்பட்டிருக்கும். விசாரணையை மேற்கொள்வதற்கு பிரதிவாதி, எதிர்வாதி மற்றும் அதிகாரி சபையின் அதிகாரிகள் அதிக காலம் செலவுசெய்து பரிசீலனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. விசாரணையின் போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் விசாரணை சபையினால் கையெழுத்திடப்பட்டிராததுடன் உரிய இரு கட்சிகாரர்களுக்கு தெரிவிக்கப்படாமையினால் அவ் உத்தரவுகள் ஆவணத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 13 (5) மற்றும் 13(6) இன் பிரிவிற்கிணங்க அதிகார சபை தவறிவிட்டது. | வேலையிலிருந்து விலகிச்சென்றத இரண்டு முழுநேர உறுப்பினர்களின் கையொப்பங்களுக்காக 12 முறைப்பாடுகள் தொடர்பான உத்தரவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன. ஆனால் இதுவரை அவர்களின் கையெழுத்து பெறப்பட்டிருக்கவில்லை, இது தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்துகின்றனர். மேலும் 02 உத்தரவுகளை 2020 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபையினால் அனுமதியளித்துள்ளது. அதன்படி, இந்த உத்தரவுகள் எதிர்கால திகதியில் தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கப்படும். மற்றொரு உத்தரவு 2020 யூலை மாதம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | விசாரணை சபையினால் உடனடியாக தொடர்புடைய உத்தரவுகளில் கையெழுத்திட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறியப்படுத்தல் வேண்டும். |
| (எ) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 8(ஏ) பிரிவிற்கமைய, ஆய்வின் நிலைமைகளை மற்றும் நுகர்வோர் அலுவல்கள் குறித்த ஆய்வுகளை ஏற்றுக்கொள்வது, அறிக்கைகளை வெளியிடுவது மற்றும் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவது அதிகாரசபையின் செயல்பாடுகளில் ஒன்றாகும். அதன்படி, சந்தை ஆய்வுகளுக்காக அதிகாரசபை மீளாய்வாண்டில் ஐந்து அறிக்கைகளை | ஆய்வில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிப்பதாக அதிகாரசபையினால் இனங்காணப்பட்டுள்ளது. அவை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளது. | சந்தை ஆய்வுகளில் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டும் |

வெளியிட்டது. சமையல் எண்ணெய்கள் குறித்த சந்தை ஆய்வில் அடையாளம் காணப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுகாதார பிரச்சினைகள் குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்க அதிகாரசபையினால் போதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

.

அதாவது 2016 ஆம் ஆண்டில் 124,082 எண்ணிக்கையான பேர்களின் பங்கேற்புடன் முழு இலங்கையையும் உள்ளடக்கிய 1538 விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்பட்டன. பொதியிடல் தரம் மற்றும் தொழில்துறையினரின் விழிப்புணர்வு மற்றும் தேங்காய் எண்ணெயை சிட்டையில் சந்தைக்கு வெளியிடும் போது சிட்டையில் (Label) காணப்பட வேண்டிய தகவல்கள் தொடர்பாக தொழில்துறையினருக்கு அறிவுறுத்துவது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் மற்றும் தேங்காய் அபிவிருத்தி அதிகாரசபைகள் இணைந்து

நுகர்வோர் ஆரோக்கியமான தரமான தேங்காய் எண்ணெயைத் தேர்வுசெய்ய இது உதவும். நுகர்வோரை தவறாக வழிநடத்தும் மற்றும் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் சமையல் எண்ணெய்களை விற்கும் வர்த்தகர்கள் மீது திடீர் சோதனைகள் மற்றும் வழக்குகளை பதிவு செய்தல் மற்றும் அது தொடர்பாக வர்த்தகர்களிற்கு விழிப்புணர்வுகளை 2019 ஆம் ஆண்டு தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக பாமாயில் மற்றும் தேங்காய் எண்ணெய் மீது மாதிரி சோதனைகளை நடத்துதல்.

| | | |
|---|---|---|
| (ஏ)சீமெந்து தடுப்புக் கற்கள் மற்றும் இரும்புக் கம்பிகள் குறித்த ஆய்வுகளில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கான திட்டங்கள் குறித்து மட்டுமே அமைச்சிற்கு அறிக்கை மடடுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த தகவல்களை பொதுமக்களுக்கு வழங்கவோ அல்லது இது தொடர்பாக செயல்பட வேண்டிய நிறுவனங்களுக்கு தெரிவிக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் வேண்டுகோளிற்கமைய, சீமெந்து தடுப்புக் கற்கள் மற்றும் இரும்புக் கம்பிகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை அமைச்சகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன, எனினும் ஆய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட சில தகவல்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது பொருத்தமானது என்றும் காணப்பட்டது. | சந்தை ஆய்வுகளில் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டும். |